குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.44/2020

அ.சா.1

2025–ம் ஆண்டு நவம்பர் 10–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கரன் | தொழில் | |
| தந்தை பெயர் | சுப்ரமணி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.07 மணி,

Accused Venkatesan present. Advocate Mr.Siddharthasankar present for Advocate Mr.P.Dasaradhan for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஊ.மாரமங்கலம், பள்ளக்காட்டில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 7 வருடங்களுக்கு முன்பு, நானும், கந்தசாமி என்பவரும் ஆர்.சி.செட்டிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே ஓமலூர் செல்லும் சாலையை கடப்பதற்காக நின்று கொண்டிருந்தோம். அப்போது, தருமபுரி பக்கம் இருந்து, சேலம் நோக்கி வேகமாக வந்த அரசு பேருந்து, என் மீது மோதிவிட்டது.

2. அதில் எனது இடதுகால், தலை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டுவிட்டது. இரவு 07.00 – 07.30 மணியளவில் விபத்து நடந்தது. ஆம்புலன்ஸ் மூலமாக என்னை ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். சம்பவம் நடந்த மறுநாள் காலை சேலம் அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் அதில் கைரேகை செய்தேன். ( **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.10 17:58:34 +0530

3. விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தின் பதிவெண் மற்றும் அதன் ஓட்டுநர் யாரென்று எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது என்னுடன் இருந்த கந்தசாமிக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. அவர் தற்போது இறந்துவிட்டார். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. நான் படிக்கவில்லை. நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் காலை 09.00 மணிக்கு வேலைக்கு சென்று மதியம் 02.00 மணிக்கு வீடு திரும்புவேன். நானும், கந்தசாமி என்பவரும் நண்பர்கள். அவர், நெசவு தொழில் செய்து வந்தார். நானும், கந்தசாமியும் அவ்வப்போது மது அருந்துவோம் என்றால் சரி.

5. நானும், கந்தசாமியும் காமலாபுரத்தில் மது அருந்திவிட்டு அங்கிருந்து ஆர்.சி.செட்டிப்பட்டியில் உள்ள சம்பவ இடத்திற்கு நடந்து வந்தோம் என்றால் சரி. காமலாபுரத்தில் இருந்து ஓமலூர் பேருந்து நிலையம் நோக்கி நடந்து வந்தபோது விபத்து ஏற்பட்டது. எனக்கு திசை தெரியவில்லை. சம்பவத்தின்போது நான் ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்தேன். பேருந்து என் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அப்போது கந்தசாமி ரோட்டை கடந்து மறுபக்கம் சென்றுவிட்டார்.

6. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் பேருந்து, பயணிகளை ஏற்றிக்கொண்டு மெதுவாக தான் வந்தது என்றாலும், நான் தான் பேருந்து வருவதை சரிவர கவனிக்காமல் மதுபோதையில் தாமாக விழுந்து விபத்து ஏற்படுத்திக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்தின்போது, மாலை 07.30 மணி இருக்கும். இருட்டாகிவிட்டது என்றால் சரி.

7. சம்பவத்தின்போது, ஆர்.சி.செட்டிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் சுமார் 5, 6 நபர்கள் இருந்தார்கள். நான், மருத்துவமனையில் இருந்தபோது, போலிசார் என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்கள் என்றாலும், அதில் நான் கைரேகை வைத்தேன் என்றாலும் சரி. அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

8. வழக்கு விபத்து, எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றாலும், சம்பவத்தின்போது, எனது நண்பர் கந்தசாமி ரோட்டை கடந்தபோது, நான் அவரை

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.10 17:58:38 +0530

அழைத்துக்கொண்டே, சாலையை கடக்க முயற்சித்ததால் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.24 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.10 17:58:40 +0530